
# கால்கேட் குளோரோபில்*
# ஈறுகளை
# பலப்படுத்துகிறது

## வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



**ஈறுகளைப் பலப்படுத்து கிறது!**

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப்பலப்படுத்துகிறது.

**வாய்நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!**

வேறு சாதாரண பற்பசையை விட மிக மிகத்தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

**சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!**

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனுமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

**வேறு எந்த பற் பசையிலும் இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை!**




* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

**இதோ!** பெரிய எககானமி அளவில் கிடைக்கிறது

# விஞ்ஞான மேதைக்குப் பாராட்டு விழா

**பு**து தில்லியிலுள்ள விஞ்ஞான பவனத்தில் சென்ற ஞாயிறு 14-12-58 அன்று டாக்டர் கிருஷ்ணனின் அறுபதாண்டு நிறைவு விழா நடைபெற்றதன் மூலம் இந்த விஞ்ஞான பவனம் கட்டின பயனை எய்தியது. ஒரு விஞ்ஞானியைக் கௌரவித்துத்தன் பெயரைக் காப்பாற்றிக் கொண்டது. தருமபுர ஆதீனத்தார் மனமுவந்து அளித்த பொன்னாடை நாட்டின் தவப்புதல்வர் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் மேனியை அலங்கரித்தது.

ஒரு பாராட்டு விழா கூட்டத்துக்கு இவ்வளவு ஜனத்திரள் இதுவரையில் கூடியதில்லை. தேசத் தலைவர் நேருஜி முதல் கிருஷ்ணனின் அன்பு வலையில் சிக்கிய சாதாரணப் பொது ஜனம் வரை பவனத்தை நிரப்பியது விழாவை மங்களகரமாக்கியது. இறை வணக்கம் பாடிய ஸ்ரீமதி மணி கிருஷ்ணஸ்வாமி தம் இனிய குரலினால் மஹாலையே நாத வெள்ளத்தில் நிரப்பி விட்டார்.

கர்நாடகப் பண்பாட்டை யொட்டி, கிருஷ்ணன் தம்பதிகளைப் பூர்ண கும்பம் வைத்து வரவழைத்த காட்சி கண்கொள்ளாததாயிருந்தது. இடபோதெல்லாம் நம்மவாகள் கூட ஆண்டு நிறைவன்று மெழுகுவத்தியை ஏற்றி வாயினால் 'சுபமாய்' ஊதி அணைத்துக் கொண்டாடுவதைப் பார்க்கும்போது என் போன்ற பழைமையாளர்களுக்கு...!

ஜனத்திரளைப் பற்றிச் சொன்னேனல்லவா? அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவர்கள் காட்டிய அமைதியும் ஒழுங்கும்தான் என்னை ஆச்சரியூத்தில் ஆழ்த்தின. நிர்வாகிகளுக்கு ஒரு ஷொட்டு கொடுக்க வேண்டியதுதான்.

எல்லாரையும் விட நேருஜிக்குத்தான் அந்த வைபவம் மிகுந்த விச்ராந்தியை அளித்தது என்று எனக்குப் பட்டது. ஏனெனில் அப்போதுதான் அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வந்தார். அந்தச் சூழ்நிலைக்கு இந்தச் சூழ்நிலை அவருக்கு நிரம்ப நிம்மதியைக் கொடுத்திருக்கும் என்பது அவருடைய சொற்பொழிவில் நன்கு தெரிந்தது. மனம் விட்டுப் புகழ்ந்தார் என்பதை விட மனம் நெகிழ்ந்து என்பது சாலப் பொருந்தும். அவருடைய உரையில் வெளியான முக்கியமான விஷயம் டாக்டர் அவர்களின் சங்கீத ஞானத்தைப் பற்றிய குறிப்பு. எதையுமே பறைசாற்றிக் கொள்ளாத ஸ்ரீகிருஷ்ணனின் பல்வேறு குணங்களில் அவருடைய சங்கீத ஞானத்தைப் பற்றிய குறிப்பு மிகவும் விசேஷமாயிருந்தது. சபாக்காரர்கள் கவனிக்க!

---

விஞ்ஞான மேதை கிருஷ்ணன் அவர்களுக்கு நடந்த பாராட்டு விழா காட்சிகளை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.

1. பிரதமருக்குக் குதூகல வரவேற்பு.

2. கரோல்பாக் பஜனை சமாஜத்தாரும் திரு கிருஷ்ணன் அவர்களைக் கௌரவித்தனர்.

3. ஆதீனகர்த்தர் அளித்த ஆடை அலங்காரம்

4. பூக்கடைத் திறப்பு விழா இல்லை! ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பாராட்டு விழா.

---

**த**லைமை தாங்கிய உள்நாட்டு மந்திரி ஸ்ரீ பந்த் பொன்னாடை போர்த்தினார். உண்மையில் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவருக்கும் அப்போது புல்லரித்தது. அவருடைய ரத்தினச் சுருக்கமான பேச்சு எப்போதுமே விஷயத்தை ஒட்டியே இருக்கும். அழகுக்கு அழகு செய்வது போல் அமைந்துவிடும்.

டாக்டர் வி. கே. ஆர். வி ராவ் ஒரு அதிசய மனிதர். ஆசிரியப் பணியாற்றும் அவருக்கு எல்லாருமே மாணாக்கர்களாகப் பட்டுவிடுவதில் வியப்பொன்றுமில்லை. எதையாவது சொல்லப் போய் எக்கச்சக்கத்தில் மாட்டிக் கொள்வதில் நிகரற்று விளங்குகிறார். முன்பொருதரம் இந்தி சம்பந்தமாய்ச் சொல்லப் போய்ச் சந்தியில் மாட்டிக் கொண்டார். இந்த வைபவத்திலும் அவர் தமது கைங்கரியத்தைச் செய்யாமலில்லை, "முன்பெல்லாம் அரசியல்வாதிகளுக்குத்தான் மவுசு; அவர்களுக்குத்தான் விருதுகளும் கௌரவங்களும் வந்து சேரும்..." என்று ஆரம்பித்த அவர், பக்கத்தில் கொலுவீற்றிருக்கும் அரும் பெரும் அரசியலாரைக் கண்டவுடன் பேச்சை மாற்ற முடியாமல் மென்று விழுங்கி ஒரு வழியாகச் சமாளித்தெழுந்தார்.

ஒரு வைபவத்துக்கு அந்யோந்ய பாவம் கிட்ட வேண்டுமானால் அதற்கு லோகசபைத் தலைவர் அனந்தசயனமய்யங்காரைச் சம்பந்தப்படுத்துவதைத் தவிர வேறு வழி கிடையாது. அவர் அன்று ஐந்து நிமிஷங்கள் தான் பேசினார்! ஆரம்ப வாக்கியமே அருமையாக அமைந்து விட்டது. "என்னைக் கூப்பிடுவீர்கள் என்று காத்துக்கொண்டிருந்தேன்.." என்று துவங்கியபோது டாக்டர் அவர்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பு வெளியாயிற்று.

டாக்டர் அவர்களின் மாணாக்கர்களில் முன்னணியிலுள்ள டாக்டர் பகவந்தம் ஒரு ரஸமான விஷயம் வெளியிட்டார். "ஒரு காலத்தில் விஞ்ஞானிகளின் பெயர்கள் 'ன'காரத்தில் முடிய வேண்டும் என்ற நம்பிக்கை பிரபலமாயிருந்தது. ஐன்ஸ்டீன், ராமன், கிருஷ்ணன் என்பன போல் என் பெயரையும் பகவந்தன் என்று மாற்றி விட்டார்கள். கடிதங்கள் அவ்வாறே விலாசமிட்டு வரத்துவங்கின" என்று அவர் தெரிவித்த போது சபையில் சிரிப்பொலி பரவியது.

விழாவில் எல்லார் கவனத்தையும் கவர்ந்தது திரு காமராஜரின் பிரசன்னம்.

அது சரி! ஹைதராபாத்திலிருந்து வழி நெடுக வந்து தமது காணிக்கையைச் செலுத்த எண்ணிய சம்ஸ்கிருதக் குழுவினரைப் பேச விடாதது பெரிய குறையாகவே பலருக்கப் பட்டது. ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் என்ன பதிலளித்தார் என்று அறிய ஆவலாயிருக்கிறதல்லவா? கேளுங்கள்.

"கற்றது கைமண்ணளவு
கல்லாதது உலகளவு — என்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்"
"என் கடன் பணி செய்து கிடப்பதே"

வாழ்க கிருஷ்ணன் தம்பதிகள்! வாழ்க பல்லாண்டு!

— சுப்புடு